<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP.No.183/2021</u>**

பெயர் :– சுந்தர் (P.W.–1)
த/பெ. :– அய்யாவு
தேதி :– 01.07.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டுசென்றேன். நான் சேத்திரபாலபுரத்திலிருந்து குத்தாலம் சென்றேன். கிழக்கு மேற்கு ரோடு நான் மேற்கு நோக்கி சென்றேன். நான் சாலையில் வடக்கு புறமாகவா, தெற்கு புறமாக சென்றேனா என்றால் தெரியவில்லை. எதிரே டேங்கர் லாரி மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசை நோக்கி வந்தது. அந்த சாலை 50, 60 அடி அகலமான சாலை என்றால் சரிதான். நான் எதிரே வந்த லாரியை எத்தனை அடி துாரத்தில் பார்த்தேன் என்றால் 10 அடி துாரத்தில் வந்ததை பார்த்தேன். டேங்கர் லாரி பிரேக் அடித்து இழுத்துக்கொண்டு வந்தது. சாலை அகலமான ரோடு என்பதால் விபத்தினை தவிர்க்க முயற்சித்தேன். ஆனால் முடியவில்லை. நான் தான் எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் டேங்கர் லாரி மீது மோதினேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

நான் ஓட்டிய வாகனத்தின் உரிமையாளர் பிரபாகரன் ஆவார். அந்த வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என் மீது வழக்கு போட்டார்களா என்று எனக்கு தெரியாது. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் Passion Pro ஆகும். அதன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வில்லை. தேவையான நபரை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கும் குத்தாலம் காவல் நிலையத்திற்கும் இடையே 1 கிமீ துாரம் தான் இருக்கும். உடனே தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு என்னை அழைத்துச்சென்றுவிட்டார்கள்.

முதல் சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் இரண்டு நாட்கள் வைத்திருந்தார்கள். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனைக்கு செல்லும் வழியில் தான் குத்தாலம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தே எனது அஜாக்கிரதையால் நடந்தது என்பதால் இழப்பீடு கோர எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் செங்கல்பட்டில் டாட்டா ஏசி வாகன டிரைவராக வேலை பார்த்து வந்தேன். எனது நான்கு சக்கர ஓட்டுனர் உரிமத்தில் இருசக்கர வாகன உரிமையும் உள்ளது என்றால் சரிதான். எனது வருமானத்தை காண்பிக்க ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்டது சிறிய காயம் தான் என்றும், நஷ்ட ஈடு பெறுவதற்காக எனக்கு அதிகம் காயம் பட்டது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிகிச்சை பெற்றது அனைத்தும் அரசு பொது மருத்துவமனை என்றால் சரிதான். சிகிச்சைக்காக நான் அதிகம் செலவு செய்யவில்லை என்றாலும் இழப்பீடு அதிகம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.